ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2260/57 - 2021 දෙසැම්බර් මස 29 වැනි බදාදා - 2021.12.29

*2260/57 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ் பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தவிசாளர் என்ற பதவியிலிருந்து விலகியுள்ளாரென கருதப்படுகின்றமை காரணமாக பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) ஆம் பிரிவின் கீழ், தவிசாளராக பதவி வகித்த அருணாசலம் ஐயம்பிள்ளை என்பவர் அங்கம் வகிக்கின்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் தவிசாளர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும், அக்கட்சியைச் சேர்ந்தவரும், பூநகரி பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான தவிசாளர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கு சிவகுமரன் ஸ்ரீரஞ்சன் என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;

பூநகரி பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் வின்சன் குணாளன் வின்சன் ஞானதயாளன் ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66ஆ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு சிவகுமரன் ஸ்ரீரஞ்சன் என்பவர் பூநகரி பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**வி. கு. வி. ஞானதயாளன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
பூநகரி பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கிளிநொச்சி,
2021, திசெம்பர் 29.

EOG 12-0333


1A - G 35714 — 20 (2021/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.